MISSION - 500 - 2024 - 2025 - TN STATE LEVEL MOCK TEST - 4 - TM

பகுதி - II படிப்பறிவுத் திறன் தேர்வு

**கணிதம்**

91. $5/6, -2/3, 3/2, 0, -1/2$ ஆகிய எண்களை ஏறுவரிசையில் எழுதும்போது முதல் எண்ணுக்கும் கடைசி எண்ணுக்கும் உள்ள வேறுபாடு ________.

(1) $-13/6$ (2) $4/3$ (3) $13/6$ (4) $5/6$

92. $3 \times 3^3 \times 3^2 \times 1^6 \times 5^6 \times (2^3)^2 = ?$

(1) $3^5 \times 10^6$ (2) $30^6$ (3) $30^{216}$ (4) $10^6$

93. $\sqrt{54} \div \sqrt{3} \times \sqrt{12} \div \sqrt{6} = ?$

(1) 4 (2) $\sqrt{216}$ (3) $\sqrt{6}$ (4) 6

94. பின்வரும் கூற்றுகளில் தவறானது எது?


(1) மிகப்பெரிய குறை முழு $-1$

(2) விகிதமுறு எண்களின் பெருக்கல் சமனி மற்றும் முழுக்களின் பெருக்கல் சமனி ஆகியவற்றின் வேறுபாடு 0 ஆகும்.

(3) அடைவுப் பண்பை, முழுக்களின் கழித்தல் நிறைவு செய்யாது.

(4) இரு இணைகோடுகளை ஒரு குறுக்குவெட்டி வெட்டும் நிகழ்வில் அனைத்துக் குறுங்கோணங்களும் சமம்.

95. கொடுக்கப்பட்ட இணைகரத்தின் பரப்பளவு என்ன?




(1) 48 $cm^2$ (2) 33 $cm^2$

(3) 44 $cm^2$ (4) 92 $cm^2$

96. பொருத்துக

i) இணைகரம் - a) $a^2$ ச.அ.

ii) சரிவகம் - b) $l \times b$ ச.அ.

iii) சதுரம் - c) $\frac{1}{2} \times b \times h$ ச.அ.


iv) செவ்வகம் - d) $b \times h$ ச.அ.

v) சாய்சதுரம் - e) $\frac{1}{2} \times h \times (a + b)$ ச.அ.

(1) i-d, ii-e, iii-a, iv-b, v-c (2) i-c, ii-e, iii-b, iv-a v-d

(3) i-d, ii-e, iii-a, iv-b, v-d (4) i-d, ii-c, iii-a, iv-b v-e

97. படத்தில் உள்ள 4 வட்டங்களும் 7 செ.மீ ஆரமுள்ளவை. எனில் நிழலிடப்பட்ட பகுதியின் பரப்பளவு என்ன?




(1) 44 $cm^2$ (2) 42 $cm^2$

(3) 36 $cm^2$ (4) 154 $cm^2$

98. $6 - 3(2x + 3) = 5(8 - x) - 47$ இச்சமன்பாட்டில் x மதிப்பு என்ன?

(1) 4 (2) 5 (3) 3 (4) 2

99. $\{[267^8]^2\}^5$ -இன் ஒன்றாம் இலக்கம் என்ன?

(1) 3 (2) 7 (3) 1 (4) 9



LIVEWORKSHEETS

100. $\frac{x^2+y^2+2xy}{x^3+3x^2y+3xy^2+y^3} = ?$

(1) $\frac{2xy}{x^3+3y+3x+y^3}$ (2) $\frac{1}{x+y}$ (3) $\frac{x^2+y^2+2xy}{(x-y)^3}$ (4) $x+y$

101. முக்கோணத்தின் அடிப்பக்கம் $2x+4y$, உயரம் 2x எனில், பரப்பளவு என்ன?

(1) $4x^2+8xy$ (2) $1+\frac{2y}{x}$ (3) $4x^2+2xy$ (4) $2x^2+4xy$

102. 7 புத்தகப் பைகளின் விலை ₹1190 எனில், 4 புத்தகப் பைகளின் விலை எவ்வளவு?

(1) ₹680 (2) ₹2082.5 (3) ₹640 (4) ₹780

103. 20%, மற்றும் 30% ஆகிய இரண்டு தொடர் தள்ளுபடிகளுக்கு இணையான ஒரே தள்ளுபடி வீதம் யாது?

(1) 35% (2) 45% (3) 40% (4) 30%


104. ₹400 க்கு 10% ஆண்டு வட்டி வீதத்தில் அரையாண்டுக்கு ஒருமுறை வட்டி கூட்டும் முறையில் ஓராண்டுக்கு கிடைக்கும் கூட்டுவட்டி எவ்வளவு?

(1) ₹441 (2) ₹41 (3) ₹440 (4) ₹40

105. படத்தில் x - இன் மதிப்பு என்ன?

(1) 235° (2) 55°


(3) 125° (4) 135°




106. **நிபந்தனை 1:** மூலைவிட்டங்கள் இருசமக் கூறிடும்.
**நிபந்தனை 2:** மூலைவிட்டங்களுக்கு இடைப்பட்ட கோணம் செங்கோணம் அன்று.
மேற்கண்ட இரு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் வடிவம் எது?

(1) சதுரம் (2) இணைகரம் (3) சாய்சதுரம் (4) சரிவகம்


107. கொடுக்கப்பட்ட படத்தில் $\overleftrightarrow{AB} \parallel \overrightarrow{CD}$ எனில், a-இன் மதிப்பு என்ன?




(1) 160° (2) 65°

(3) 135° (4) 70°

108. படத்தில் Q என்ற புள்ளியானது P என்ற புள்ளியைப் பொறுத்து 90° கடிகார எதிர் திசையில் திருப்பப்பட்டால் அதன் புதிய நிலை என்ன?




(1) B (2) C

(3) D (4) A


109. {மிகச்சிறிய ஈரிலக்க எண், மிகப்பெரிய ஓரிலக்க எண், மிகச்சிறிய பகு எண், மிகப்பெரிய குறை முழு, மிகப்பெரிய ஈரிலக்க எண், மிகப்பெரிய ஈரிலக்கப் பகா எண்} - இத்தொகுப்பின் வீச்சு என்ன?

(1) 100 (2) 98 (3) 96 (4) இவற்றில் எதுவுமில்லை



LIVEWORKSHEETS

110. கொடுக்கப்பட்ட அமைப்பானது பாஸ்கல் முக்கோணத்தில் இருந்து எடுக்கப்பட்டது. எனில், a மற்றும் b ஆகியவற்றின் மதிப்பு என்ன?




(1) 13, 2 (2) 10, 5 (3) 12, 3 (4) 14, 1

## அறிவியல்


111. திடப்பொருளை வெப்பப்படுத்தும்போது உண்டாகும் விளைவுகளில் தவறானது எது?

(1) பருப்பொருளின் அளவு மற்றும் துகள்களின் எண்ணிக்கையில் மாற்றம் நிகழ்வதில்லை
(2) பருப்பொருளின் பருமன் அதிகரிக்கின்றது
(3) பொருளின் நிறை அதிகரிக்கின்றது
(4) துகள்களின் பரிமாணத்தில் எந்த மாற்றமும் இல்லாமல் அதே அளவில் இருக்கின்றன


112. ஒரு நேர்கோட்டுப் பாதையில் 16 மீ/வி என்ற திசைவேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பொருளானது 8 விநாடியில் 3 மீ/வி என்ற திசைவேகத்தினை அடைகிறது. எனில், அப்பொருள் பெறும் முடுக்கத்தின் மதிப்பு மற்றும் வகை யாது?

(1) -0.625 மீ/வி$^2$, நேர் முடுக்கம் (2) -1.625 மீ/வி$^2$, எதிர் முடுக்கம்
(3) 0.625 மீ/வி$^2$, நேர் முடுக்கம் (4) 1.625 மீ/வி$^2$, எதிர் முடுக்கம்


113. பின்வருவனவற்றுள் பேருந்தின் முடுக்கம் அதிகரித்தலை (சீரற்ற முடுக்கம்) குறிக்கும் வரைபடம் எது?




(1)



(2)



(3)



(4)

114. அணுவின் அமைப்பை அதனுள் காணப்படும் ஆற்றல் மட்டங்களின் அடிப்படையில் விளக்கியவர் __________.

(1) நீல்ஸ்போர் (2) ஜான் ஜோசப் தாம்ஸன்
(3) எர்னஸ்ட் ரூதர்போர்டு (4) எர்வின் ஷிராடிங்கர்

115. 14°F -ன் K- மதிப்பு யாது?

(1) 362.15 K (2) -362.15 K (3) 263.15 K (4) -263.15 K

116. ஒரு மின்சுற்றில் 10 வினாடிகளில் 2.04 A மின்னோட்டம் பாய்கிறது எனில், அம் மின்சுற்றில் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் கடந்து செல்லும் மின்னூட்டத்தின் அளவு யாது?

(1) 0.204 C (2) 2.04 C (3) 20.4 C (4) 204 C

117. எந்த இரு நிறங்களை சேர்த்தால் சையான் நிறம் கிடைக்கும்?

(1) 1 சிவப்பு + 1 நீலம் (2) 1 சிவப்பு + 1 பச்சை
(3) 1 பச்சை + 1 நீலம் (4) 1 வெள்ளை + 1 கருப்பு



LIVEWORKSHEETS

118.தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) சுருள் விண்மீன் திரள்கள் - அதிக வயதுடைய விண்மீன்களை உள்ளடக்கியவை

(2) நீள்வட்ட விண்மீன் திரள்கள் - முப்பரிமாணங்களைக் கொண்ட சீரற்ற சுற்றுப் பாதையில் உள்ள விண்மீன்களை கொண்டுள்ளன

(3) ஒழுங்கற்ற விண்மீன் திரள்கள் - கண்டுபிடிக்கப்பட்ட விண்மீன் திரள்களில் நான்கில் ஒரு பங்கு இவ்வகையானவை

(4) கோடிட்ட விண்மீன் திரள்கள் - நமது சூரியமண்டலம் இவ்விண்மீன் திரளில் உள்ளது

119. 45° என்பதன் ரேடியன் மதிப்பு யாது?

(1) $\pi$ (2) $\frac{\pi}{2}$ (3) $\frac{\pi}{3}$ (4) $\frac{\pi}{4}$

120. ஒப்புமை தருக: ஒளி எதிரொளிப்பு : பெரிஸ்கோப் :: ஒளிவிலகல் : ?

(1) கலைடாஸ்கோப் (2) முப்பட்டகம் (3) பரவளைய ஆடிகள் (4) ஊசித் துளை காமிரா

121. வெப்பக் கடத்தலின் அடிப்படையில் பின்வருவனவற்றில் பொருந்தாததைக் கூறுக

(1) கம்பளி (2) கண்ணாடி (3) பீங்கான் (4) காப்பர்

122. கீழ்க்கண்டவற்றுள் அதிக மின்தடை கொண்ட உலோகம் எது?

(1) காப்பர் (2) டங்ஸ்டன் (3) அலுமினியம் (4) இரும்பு

123. பொருத்துக. (20°C -இல் ஒலியின் வேகம் m/s -இல்

| | | |
|---|---|---|
| a) ஹைட்ரஜன் | - | i) 1530 |
| b) கடல் நீர் | - | ii) 6420 |
| c) ஆக்ஸிஜன் | - | iii) 1284 |
| d) இரும்பு | - | iv) 5950 |
| e) அலுமினியம் | - | v) 316 |

(1) a - iii, b - i, c - v, d - iv, e - ii (2) a - iii, b - v, c - iv, d - ii, e - i

(3) a - iv, b - ii, c - v, d - i, e - iii (4) a - iv b - i, c - iii, d - v, e - ii

124. ஒரு மின்னிறக்கக் குழாயில் கேதோடு கதிர்கள் வரும் பாதையில் எடை குறைந்த சக்கரத்தை வைக்கும் போது சக்கரம் சுழல்கிறது ஏன்?

(1) கேதோடு கதிர்கள் நேர்கோட்டில் பயணிப்பதால்

(2) கேதோடு கதிர்கள் நிறை மற்றும் இயக்க ஆற்றலை பெற்ற துகள்களால் உருவாக்கப்பட்டிருப்பதால்

(3) கேதோடு கதிர்கள் எதிர்மின் சுமையைப் பெற்றிருப்பதால்

(4) மின்னிறக்கக் குழாயில் நிரப்பப்படும் சில வாயுக்களின் பண்புகளைப் பொறுத்திருப்பதால்

125.சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.

(1) மலைப்பகுதி - அதிக வளிமண்டல அழுத்தம்

(2) மிதப்பு விசை - கீழ்நோக்கிய விசை

(3) பாஸ்கல் விதி - நீரியல் உயர்த்திகளின் இயக்கம்

(4) பாகியல் விசை - அலகு நி/ மீ

126.எளிதில் வெட்டக்கூடிய கண்ணாடியைப் பெற கண்ணாடி தயாரிப்பு முடிந்த நிலையில் கண்ணாடியுடன் _______ சேர்க்கப்படுகிறது.

(1) இரும்பு ஆக்சைடு (2) ஈய ஆக்சைடு

(3) போரான் ஆக்சைடு (4) குரோமியம் ஆக்சைடு



LIVEWORKSHEETS

127. தவறான கூற்றைக் கண்டறி:

(1) ஒரு திண்மத்தினை வெப்பப்படுத்தி, திரவ நிலைக்கு மாற்றும் முறைக்கு உருகுதல் என்று பெயர்.

(2) முதன் முதலில் நொதித்தல் என்ற நிகழ்வினை விவரித்தவர் லூயிஸ் பாஸ்டியர் ஆவார்.

(3) நீரை மின்னாற்பகுப்பிற்கு ஈடுபடுத்தினால் அது பிரிகை அடைந்து ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாக மாறுகிறது.

(4) பதங்கமாக்குதல் என்பது ஒரு பிரித்தெடுக்கும் முறையாகவும் தூய்மையாக்கும் முறையாகவும் திகழ்கிறது.

128. சரியான கூற்றைக் கண்டறி:

(1) ஒரு வேதியியல் மாற்றத்தின்பொழுது ஒளி, ஒலி, அழுத்தம் போன்றவை உருவாவதுடன் வேறு சில விளைவுகளும் நிகழ்கின்றன.

(2) தொடர்ச்சியான பல இயற்பியல் மாற்றங்களினால் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன

(3) சோடியம் பை கார்பனேட்டுடன் சிட்ரிக் அமிலம் வினைபுரிந்து ஹைட்ரஜன் வாயுவை தருகிறது.

(4) தாவர எண்ணெய்களில் நைட்ரஜன் வாயு சேர்க்கப்பட்டு வனஸ்பதி தயாரிக்கப்படுகிறது.

129. நீர் ________ வெப்பநிலையில் ________ சதவீதம் சிதைவடைந்து ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் வாயுவை தருகிறது.


(1) 100°C, 0.1% (2) 1000°C, 1% (3) 1500°C, 1.5% (4) 2000°C, 0.02%

130. $CH_3COOH + NaOH \rightarrow$ ________ + ________ + வெப்பம்

(1) சோடியம் நைட்ரேட் + நைட்ரஜன் (2) சோடியம் குளோரைடு + குளோரின்

(3) சோடியம் அசிட்டேட் + நீர் (4) சோடியம் சல்பேட் + சல்பர்

131. அம்மோனியாவிற்கான ஜான் டால்டனின் குறியீடு எது?



(1) (2) (3) (4)

132. வாகனங்களின் டயர்களில் நைட்ரஜன் வாயுவை நிரப்புகிறோம். ஏன்?

(1) டயர்களின் ஆயுளை அதிகரிக்கிறது

(2) சாதாரண காற்றை விட நிலையான வெப்பநிலை

(3) நைட்ரஜன் சக்கர விளிம்பு போன்ற உலோகக் கூறுகளுடன் வினைபுரிவதில்லை

(4) அனைத்தும்

133. பொருத்துக.

a) கிழங்கு - i) செதில் இலைகளில் கோணமொட்டு
b) கந்தம் - ii) நலிந்த பக்கவாட்டுக்கிளை
c) குமிழம் - iii) தண்டில் செயலற்ற மொட்டு
d) சக்கர் - iv) தண்டின் மென்மையான கிளை
e) ஸ்டோலன் - v) சதைப்பற்றான இலைகளில் உணவு சேமிப்பு

(1) a - ii, b - i, c - v, d - iv, e - iii (2) a - iii, b - v, c - iv, d - ii, e - i

(3) a - iv, b - ii, c - v, d - i, e - iii (4) a - iii, b - i, c - v, d - ii, e – iv

134. ஈரப்பதமான ரொட்டியில் உருவாகும் பூஞ்சையின் பெயர் ________.

(1) அல்புகோ கேண்டிலா (2) மைக்கோஸ்போரம்

(3) ரைசோபஸ் ஸ்டான்லி ஃபர் (4) கிளாவிசெப்ஸ் பர்பூரியா



LIVEWORKSHEETS

135. கூற்று : கள்ளித் தாவரங்களில் முட்கள் போன்று காணப்படுவது அதன் இலைகள் ஆகும்.
காரணம்: நீராவிப் போக்கைத் தவிர்ப்பதற்காக இலைகள் முட்களாக மாறியுள்ளன.
(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமாகும்.
(2) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
(3) கூற்று சரி காரணம் தவறு
(4) கூற்று தவறு காரணம் சரி

136. தவறான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) அகாலிபா இண்டிகா - யூஃபோர்பியேசி
(2) அலோ வெரா - லில்லியேசி
(3) சொலானம் டிரைலொபேட்டம் - சொலனேசி
(4) ஏகில் மார்மிலோஸ் - மால்வேசி

137. பொருத்துக.
a) ஆல்காக்கள் - i) ஃபியூனேரியா
b) மாஸ்கள் - ii) பாரமீசியம்
c) பெரணிகள் - iii) அடியாண்டம்
d) மொனிரா - iv) காரா
e) புரோடிஸ்டா - v) நீலப்பசும்பாசி
(1) a - iii, b - v, c - ii, d - i, e - iv (2) a - iv, b - i, c - iii, d - v, e - ii
(3) a - ii, b - iv, c - i, d - v, e - iii (4) a - ii, b - i, c - v, d - iii, e - iv

138. செல்லினுள் காணப்படும் செல் சுவாச உறுப்பு ________ ஆகும்.
(1) ரிபோசோம் (2) சென்ட்ரியோல் (3) நுண்குமிழ்கள் (4) மைட்டோகாண்ட்ரியா

139. எந்த நுண்ணுயிரி மனிதனை விலங்குகள் கடிப்பதன் மூலம் மனித உடலினுள் நுழைந்து தண்டுவடத்தின் வழியே மூளைக்கு பயணிக்கிறது?
(1) ஆப்தோ வைரஸ் (2) ரேப்டோ விரிடி
(3) மைக்கோபாக்டீரியம் டியூபர்குலே (4) கல்லீரல் புழு

140. பொருந்தாத ஒன்றைக் காண்க
(1) எபிதீலியத் திசு (2) கடத்தும் திசு
(3) நரம்புத் திசு (4) இணைப்புத் திசு

141. "பிரித்தெடுப்போர்கள் நோய்" என அழைக்கப்படும் ஆந்த்ராக்ஸ் என்ற நோய் ________ நுண்ணுயிரியால் ஏற்படுகிறது
(1) பூஞ்சை (2) பாக்டீரியா
(3) வைரஸ் (4) புரோட்டோசோவாக்கள்

142. பூஞ்சைகளின் அடிப்படை அமைப்பாக அமைந்த மெல்லிய நூலிழைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
(1) ஹைபா (2) கேப்சிட் (3) ரைசாய்டு (4) கசையிழை

143. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்.
(1) அமீபா - பெலிக்கிள்
(2) யூக்ளினா - பசுங்கணிகம்
(3) பிளாஸ்மோடியம் - செல் சுவர்
(4) பாரமீசியம் - ஸ்டிக்மா



LIVEWORKSHEETS

144. **கூற்று**: மனிதர்களின் உடல் வெப்பநிலை சீராக நிலைநிறுத்தப்படுகிறது.
**காரணம்**: உடல் வெப்பநிலை குறையும்பொழுது தசைச் செயல்பாடு மற்றும் நடுக்கத்தின்மூலம் வெப்பம் உற்பத்தி செய்யப்படுகிறது.
(1) கூற்று தவறு, காரணம் சரி கூற்று மற்றும் காரணம் தவறு
(2) கூற்று சரி, காரணம் தவறு
(3) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
(4) கூற்று மற்றும் காரணம் சரி, மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது

145. கால் முள்ளெலும்பு மற்றும் கால் எலும்புகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
(1) கார்பல், மெட்டா கார்பல் (2) டார்சல், மெட்டா டார்சல்
(3) டிபியா, ஃபிபுலா (4) ஹீமரஸ், அல்னா

## சமூக அறிவியல்

146. பொருத்துக:
(a) தாரிக்-இ-பிரோஷாகி – (i) அல் பரூனி
(b) தாகுயூக்-இ-ஹிந்த் – (ii) ஹசன் நிஜாமி
(c) தாஜ்-உல்-மா-அசிர் – (iii) மின்கஜ் உஸ் சிராஜ்
(d) தபகத்-இ-நஸிரி – (iv) ஜியா-உத்-பரணி
(1) a - iv, b - i, c - iii, d - ii (2) a - iv, b - i, c - ii, d - iii
(3) a - ii, b - iii, c - iv, d - i (4) a - iii, b - iv, c - ii, d - i

147. 'பெரியபுராணமும் கம்பராமாயணமும்' எக்காலப் பகுதியைச் சேர்ந்தவை?
(1) பாண்டியர்கள் (2) பல்லவர்கள் (3) சோழர்கள் (4) விஜயநகர மன்னர்கள்

148. காலமுறைப்படி வரிசைப்படுத்துக:
1. தைமூரின் படையெடுப்பு
2. பிரோஷ் ஷா துக்ளக் இயற்கை எய்தியது
3. முகமது பின் துக்ளக் அரியணை ஏறியது
4. மதுரை தனி சுல்தானியமாக உருவானது
(1) 3, 4, 1, 2 (2) 3, 4, 2, 1 (3) 2, 4, 1, 3 (4) 4, 2, 3, 1

149. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்று எது?
(அ) அகமது நகரின் அரசின் ராணி துர்க்காவதி மீது அக்பர் படையெடுத்தார்
(ஆ அக்பர் 1568 ல் ராந்தம்பூரை கைப்பற்றினார்
(இ) சலீம் சிஸ்டியும், ராம்தாசும் அக்பரின் அளவில்லா மதிப்பையும், மரியாதையையும் பெற்றிருந்தனர்
(ஈ) ராஜா மான்சிங்கின் மகனான ராணா பிரதாப்பை 1576 ல் ஹால்டிகாட் போரில் அக்பர் வெற்றி கொண்டார்.
(1) அனைத்தும் சரி (2) அ மற்றும் ஈ சரி
(3) இ மற்றும் ஈ சரி (4) இ மட்டும் சரி

150. சுரவார்டி அமைப்பைத் தோற்றுவித்த அப்துல் - வகித் அபு நஜிப் எந்த நாட்டைச் சார்ந்தவர்?
(1) ஈரான் (2) பாகிஸ்தான் (3) ஈராக் (4) இந்தியா

151 சித்தன்னவாசல் கோவில் அமைக்கப்பட்டது _______.
(1) கிபி 6 ஆம் நூற்றாண்டு (2) கிபி 7 ம் நூற்றாண்டு
(3) கிபி 8 ஆம் நூற்றாண்டு (4) கிபி 9 ஆம் நூற்றாண்டு



LIVEWORKSHEETS

152.கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது அல்ல?
(1) மகாபலிபுரத்தில் அமைந்துள்ள கடற்கரை கோயில் பல்லவ அரசன் இரண்டாம் நரசிம்மவர்மனால் எழுப்பப்பட்டவை
(2) ஆதிநாதர் கோவில், ஆழ்வார் திருநகரியில் உள்ளது
(3) முற்கால சோழர்களின் கட்டடக் கலை செம்பியன் மாதேவி பாணியில் அமைந்ததாகும்.
(4) பிற்கால சோழர்கள் காலம் மண்டபங்களுக்கு பெயர் பெற்றதாகும்

153.கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது அல்ல?
(1) பொதுவாகத் தமிழர்கள் திகம்பரர் பிரிவைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர்
(2) அங்கங்கள் என்பது சுவேதாம்பரர்களால் பின்பற்றப்படும் நூல்
(3) தமிழ் நாட்டிலுள்ள சமண சிலைகளுள் மிகவும் உயரமானது நேமிநாதர் சிலை
(4) தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையிலுள்ள சமணர் கோவில் பாண்டிய அரசன் மாறவர்மன் குலசேகரனால் உருவாக்கப்பட்டது.

154.கீழ்க்கண்டவற்றுள் சரியான இணை எது?
(1) பைரவ மலை – குக்கரப் பள்ளி
(2) மகா வம்சம் – புத்தரின் போதனைகள்
(3) மகேந்திரவர்மன் – வீர சோழியம்
(4) புத்த கோசா – புத்தசரிதா

155.சூரத் அருகே நடைபெற்ற கடற்போரில், போர்ச்சுகீசியப் படையை தோற்கடித்த ஆங்கில தளபதி _______.
(1) தாமஸ் பெஸ்ட் (2) நான்காம் கிரிஸ்டியன்
(3) இரண்டாம் சார்லஸ் (4) வில்லியம் ஹாக்கின்ஸ்

156 கர்நாடக நவாப் அன்வாருதீனுக்கும், பிரெஞ்சுப் படைக்கும் இடையே நடைபெற்ற போர் ______.
(1) பக்சார் போர் (2) அடையாறு போர்
(3) பிளாசி போர் (4) தலைக்கோட்டை போர்

157 கூற்று: டல்ஹௌசி பிரபுவால் 1848 ல் வாரிசு இழப்பு கொள்கை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
காரணம்: இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை உயர்த்துதல், ஆங்கிலேய பேரரசை விரிவுபடுத்துதல்.
(1) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானவை
(2) கூற்று சரி, காரணம் தவறு
(3) கூற்று சரியானது, காரணம் கூற்றை விளக்குகிறது
(4) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை

158 அலிகாரில் முகமதிய ஆங்கிலோ பள்ளியை நிறுவியவர் _______.
(1) சர் சையது அகமது கான் (2) சீகன் பால்கு
(3) டாக்டர் இராதாகிருஷ்ணன் (4) ரெவரன்ட் லாரி

159.கீழ்க்கண்டவற்றுள் எது / எவை சரி?
(அ) மியான்மர் – போப்பா
(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் – செயின் ஹெலன்
(இ) கவசத்தின் ஆழம் – 2900 கி.மீ
(ஈ) உட்கருவம் – சிலிக்கா மற்றும் மெக்னீசியம்
(1) அ, ஆ, இ மட்டும் சரி (2) அனைத்தும் சரி
(3) அனைத்தும் தவறு (4) அ, ஆ மட்டும் சரி

160.'வண்டல் விசிறிகள்' உருவாகக் காரணம் _______.
(1) காற்று (2) பனியாறு (3) கடல் அலைகள் (4) ஆறு



LIVEWORKSHEETS

161.கோசி மலைப்பாதையின் வடக்குப் பகுதியில் காணப்படும் குடியிருப்பு _______.
(1) குழுமிய குடியிருப்பு (2) நீள் வடிவ குடியிருப்பு
(3) செவ்வக வடிவ குடியிருப்பு (4) சிதறிய குடியிருப்பு

162.'கொய்னா அணை" இந்தியாவில் எந்த மாநிலத்தில் உள்ளது?
(1) மகாராஷ்டிரா (2) குஜராத் (3) பஞ்சாப் (4) உத்ரகாண்ட்

163.கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றை தேர்ந்தெடு:
(அ) ஜெய்சால்மர் காற்றாலை பண்ணை ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ளது
(ஆ) சர்தார் சரோவர் அணை மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ளது.
(இ) துக்குருயி அணை வெனிசுலாவில் உள்ளது
(ஈ) ஆற்றல் வளங்களில் மிகவும் மலிவானது நீர்மின்சக்தி
(1) அ, ஆ, இ மட்டும் சரி (2) அ, ஆ, ஈ மட்டும் சரி
(3) அ மற்றும் ஈ சரி (4) அ மற்றும் இ சரி

164.பொருந்தாத இணை ஒன்றை தேர்ந்தெடு
(1) மைக்கா – சீனா
(2) மாங்கனீசு – தென் அமெரிக்கா
(3) பாக்ஸைட் – ஆஸ்திரேலியா
(4) சுண்ணாம்பு கல் – சீனா

165.பொருத்துக:
(a) அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சி – i. ஆந்திரப் பிரதேசம்
(b) தர்கார்லி கடற்கரை – ii. சேர்வராயன் குன்று
(c) உப்பளப்பாடு பறவைகள் சரணாலயம் – iii. மகாராஷ்டிரா
(d) கிளியூர் நீர்வீழ்ச்சி – iv. திரிச்சூர்
(1) a - iv, b - i, c - iii, d - ii (2) a - iv, b - iii, c - i, d - ii
(3) a - ii, b - iii, c - iv, d - i (4) a - iii, b - iv, c - ii, d - i

166.'உயர் விளிம்பு' என அழைக்கப்படுவது _______.
(1) ஜவ்வாது (2) மேகமலை (3) ஆனை மலை (4) கொல்லி மலை

167."கோடாலி உடைப்பான்" என அழைக்கப்படும் மரம் _______.
(1) லாக்வுட் (2) லாரல் (3) கியூபிராக்கோ (4) பைன்

168.கீழ்க்கண்டவற்றுள் எது தவறான கூற்று?
(1) அமேசான் காடுகள் 'செல்வாஸ்" என அழைக்கப்படுகின்றன.
(2) உலகின் சோள உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முதன்மை நாடாக விளங்குவது அர்ஜென்டினா
(3) கானா நாடு காபி உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது
(4) க்ரயல்லோ என்னும் கால்நடைகள் ஆல்ஃபலாஃபா என்னும் புல்வகையை உண்டு வாழ்கின்றன.

169.கீழ்க்கண்டவற்றுள் தவறாக பொருந்தியுள்ளது எது?
(1) எண்ணெய் உற்பத்தி – வெனிசுலா
(2) வட அமெரிக்கா – கிரெனடா
(3) தென் அமெரிக்கா – மரகாய்போ ஏரி
(4) ஐரோப்பியர்கள் மற்றும் கருப்பர்கள் – ஸாம்போ

170.'மெட்டா மார்பிக்" என்ற வார்த்தையில் மார்பா என்பதன் பொருள் _______.
(1) மாற்றம் (2) வடிவம் (3) மண் (4) வெப்பம்

171.பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு.
(1) பெர்த் (2) டார்வின் (3) பிரிஸ்பேன் (4) கெய்ரோ



LIVEWORKSHEETS

172.'தகவல் நுட்பத் தொழிலகங்கள்" என அழைக்கப்படும் துறை ______.
(1) ஐந்தாம் நிலை பொருளாதார செயல்பாடுகள்
(2) நான்காம் நிலை பொருளாதார செயல்பாடுகள்
(3) மூன்றாம் நிலை பொருளாதார நடவடிக்கை
(4) இரண்டாம் நிலை பொருளாதார நடவடிக்கை

173. பொருத்துக.

| | | |
|---|---|---|
| (அ) கோகோ | – | 1. பின்னாக்கல் |
| (ஆ) அயர்ஸ் பாறை | – | 2. நியூ சவுத் வேல்ஸ் |
| (இ) கோசியஸ்கோ | – | 3. ஆப்பிரிக்க ஏரி |
| (ஈ) மாலாவி மற்றும் துர்கானா | – | 4. கானா |

(1) அ - 4 ஆ - 1 இ - 3 ஈ - 2 (2) அ - 4 ஆ - 1 இ - 2 ஈ - 3
(3) அ - 2 ஆ - 3 இ - 4 ஈ - 1 (4) அ - 3 ஆ- 4 இ - 1 ஈ - 2

174.ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பாலைவனம் ______.
(1) சகாரா பாலைவனம் (2) சிம்சன் பாலைவனம்
(3) வின்சன் மாஸிப் (4) விக்டோரியா பாலைவனம்

175.நார்வே நாட்டில் செயல்படும் கட்சி முறை ______.
(1) ஒரு கட்சி முறை (2) இரு கட்சி முறை
(3) பல கட்சி முறை (4) மேற்கண்ட எதுவுமில்லை

176.சட்ட மேலவை உறுப்பினராக எத்தனை வயது நிறைவடைந்திருக்க வேண்டும்?
(1) 25 வயது (2) 30 வயது (3) 35 வயது (4) 18 வயது

177.அன்னை தெரசா, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ஆண்டு ______.
(1) 1972 (2) 1979 (3) 1997 (4) 2007

178.தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் எப்போது அமைக்கப்பட்டது?
(1) 1986 (2) 1991 (3) 1988 (4) 1990

179.PIO என்பது ______.
(1) வெளிநாடு வாழ் இந்தியர்
(2) இந்திய பூர்வீக குடியினர்
(3) வெளிநாட்டு குடியுரிமையைக் கொண்ட இந்தியாவில் வசிப்பதற்கான அட்டை வைத்திருப்பவர்
(4) குடியுரிமையை இழந்தவர்

180.பின்வருவனவற்றுள் எது நேர்முக வரி அல்ல?
(1) நிறுவன வரி (2) சொத்து வரி (3) அன்பளிப்பு வரி (4) விற்பனை வரி


| Created by MATHS | SCIENCE | SOCIAL SCIENCE |
|---|---|---|
| **P. PRABATH,** B T. Asst (Maths), PUMS, Komaliyur Salem District | **C.VARADHARAJAN** B T. Asst (Science), PUMS, Godepalayam, Bhavanisagar Block, Erode District | **V. MANIKANDAN,** B T. Asst (English), PUMS, Urudaiyapatti, Tha.Pet Block, Trichy District |



**Our Sincere thanks to....**

**N.Chinnannan,** B T.Asst (Maths), PUMS, K.Pallipatti, Konganapuram Block, Salem District.
**T.C. Pooventhan,** B T. Asst (Maths), PUMS, Godepalayam, Erode District.
**M.Anbhazagan**, B T. Asst (Science), PUMS, Dhiyanapuram, Thiruvarur Block, Thiruvarur District.
**K. Selvakumar,** B T.Asst (Maths), KVIS, Ramanathapuram District.




LIVEWORKSHEETS